# முஹர்ரம் கர்பலா

01. முஹர்ரம் இரண்டாம் நாள் இமாமின் கர்பலா வருகை

புனித மக்காவிலிருந்து மதீனாவுக்கும் அங்கிருந்து ஈராக்கிற்கும் வந்த இமாம் ஹுஸைன் அவர்கள் , ஹிஜ்ரி 60ம் ஆண்டு முஹர்ரம் இரண்டாம் நாள் கர்பலாப் பூமியை வந்தடைகிறார்கள் . இங்கு வாழ்ந்து கொண்டு இருந்த ஒரு கூட்டத்தினரிடம் , இவ்விடத்தின் பெயர் என்ன ? என வினவிய போது , இது ' ஸத்துல் புராத் ' என்றனர் . இதற்கு வேறு பெயரும் உண்டா ? என வினவிய போது , ' கர்பலா ' என்றனர் . அங்கு ஒரு பிடி மண்ணை அள்ளி நுகர்ந்தார்கள் இமாம் ஹுஸைன் அவர்கள் . இது ஒரு வகை மணம் கமழும் பூமி . இதுதான் என் பாட்டனார் ( ஸல் ) அவர்கள் வாக்களித்த பிரதேசம் எனக் கூறி , அவ் இடத்தை தமது அமைவிடம் ஆக்கிக் கொண்டார்கள் .

இமாமின் வருகை பற்றி முன்னமே அறிந்து இருந்த யஸீத் , இமாமை வழி மறித்துத் தடுக்க , ஹுர் இப்னு யஸீத் அர் ரியாகி என்பவரின் தலைமையில் ஒரு படையை அனுப்பி வைத்து இருந்தான் . கவர்னர் உபைதுல்லாஹ் இப்னு ஸியாதிற்கு இமாமின் வருகை பற்றிய செய்தியை ஹுர் அறிவித்து விட்டார் .

இமாம் அவர்களோ , தமது உற்றார் உடன் பிறப்புக்களை ஒன்று கூட்டி , ஒரு முறை அவர்களை நோட்டம் இட்டு , மனம் நொந்தவர்களாக , ' இறைவா ! நாம் உனது தூதர் முஹம்மத் ( ஸல் ) அவர்களின் குடும்பம் . பனூ உமையாக்கள் எம்மை எமது பாட்டனாரின் புனிதத் தளத்தில் இருந்து வெளியேற்றி , எமது உரிமைகளைத் துவசம் செய்து விட்டனர் . இறைவா ! அநியாயக் காரர்களிடம் இருந்து எமது உரிமையைப் பெற்றுத் தா . அநியாயக் காரர்கள் மீது எமக்கு வெற்றியைத் தா ' எனப் பிரார்த்தித்தார்கள் .

செய்யிதினா இமாம் ஹுஸைன் அவர்களைக் கூபா வாசிகள் தமது பிரதேசத்தில் இடம் பெறும் மார்க்க விரோதச் செயல்களைத் தடுத்து நிறுத்த வருகை தருமாறு அழைப்பு விடுத்தனர் . ' பெருமானார் ( ஸல் ) அவர்கள் ஹலாலாக்கிய விடயங்கள் ஹராமாக்கப் பட்டிருக்கின்றன . ஹராமாக்கிய விடயங்கள் ஹலாலாக்கப் பட்டு இருக்கின்றன . பைத்துல் மால் பொது நிதி யஸீதிதன் ஒய்யார வாழ்க்கைக்குத் தாரை வார்க்கப் படுகிறது . நன்மைகள் ஏவப் படுவதோ , தீமைகள் தடுக்கப் படுவதோ இல்லை . எனவே ! இமாம் அவர்களே , நாம் உங்களுக்கு சத்தியப் பிரமாணம் ( பைஅத் ) செய்கிறோம் . வாருங்கள் ' என நூற்றுக் கணக்கான கடிதங்கள் எழுதப் பட்டு , தூதுவர்கள் மூலம் இமாம் ஹுஸைனுக்கு அனுப்பப் பட்டன . ஆனால் , கூபா வாசிகளோ தமது உடன் படிக்கையை நிறை வேற்றத் தவறியது மட்டுமன்றி , அழைப்பை ஏற்று வந்த இமாமுக்கு உதவியும் புரியாது விலகிக் கொண்டனர் . இமாம் அவர்களோ , வரும் வழியில் உரையாகவும் , கர்பலா வந்தடைந்து கடிதம் மூலமாகவும் கூபா வாசிகளுக்கு அழைப்பு விடுத்தும் பயன் ஏதும் கிடைக்கவில்லை என்பது வரலாற்று உண்மை .

02. முஹர்ரம் மூன்றாம் நாள் படைக் குவிப்பு

உமர் இப்னு ஸஅத் பெருந் தொகை எண்ணிக்கையானோருடன் கர்பலாக் களம் வந்தடைந்தான் . ஆனால் , இமாம் ஹுஸைன் அவர்களோ தம்மில் எவ்வித மாற்றமும் இன்றி , தமது இலட்சியப் பாதையை தொடர்கின்றார்கள் . மஜ்மஉல் பஹ்ரைன் எனும் நூலில் கூறப் பட்டுள்ளதாவது ' இமாம் 60 ஆயிரம் திர்ஹத்திற்கு அப் பூமியில் ஒரு பகுதியை வாங்கிக் கொள்கிறார்கள் . அவ் இடத்தில்தான் அன்னாரின் புனித அடக்கஸ்தலம் அமையப் பெற்றுள்ளது . இன்று வரை பல்லாயிரக் கணக்கான மக்கள் தரிசித்தும் பிரார்த்தித்தும் வருகிறார்கள் .

03 . முஹர்ரம் நான்காம் நாள் உபைதுல்லாஹ்வின் பசப்பு வார்த்தை

வரலாற்றை உற்று நோக்கும் போது , இந்நாளில் உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் கூபா வாசிகளை மஸ்ஜிதுக்கு அழைத்து , அவர்கள் மத்தியில் உரையாற்றினான் . யஸீதை நற் கருமங்கள் புரிந்து கொடை வழங்கும் சிறந்த தலைவரா வர்ணித்து , தற்போது தன்னிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள பெருந் தொகைப் பணம் தங்களுக்கு இடையே பகிர்ந்து அளிக்கப் பட உள்ளது எனவும் கூறி , மக்களை இமாம் ஹுஸைனை விட்டும் திசை திருப்ப தன்னாலான சகல சூழ்ச்சிகளையும் பிரயத் தனங்களையும் மேற் கொண்டான் .

அத்தோடு ஷாம் வாசிகளுக்கும் ஒரு தொகைப் பணத்தை ஒதுக்கி , ' தில் ஜௌஸன் ' போன்றோரை இமாம் ஹுஸைனுடன் போராட முன் வந்துள்ள உமர் இப்னு ஸஅத்திற்கு உதவி புரிந்து , அவரை வெற்றி பெறச் செய்ய முன் வருமாறு வேண்டிக் nhகண்டான் .

04 . முஹர்ரம் 5ம் நாள்

உபைதுல்லாஹ் இப்னு ஸியாத் எவ்வாறெல்லாம் யஸீதின் படையைப் பலப் படுத்த முடியுமோ , அவ்வாறெல்லாம் முயற்சித்து , காலாட் படை , குதிரைப் படை என்பவற்றை எல்லாம் அனுப்பும் முயற்சியில் ஈடுபட்டான் . களத்தில் கூடிய படையினரின் எண்ணிக்கை பற்றி பல கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் , அன்றைய தினம் யஸீதின் அரசிடம் இருந்து ஊதியம் , உடை , ஆயுதம் மற்றும் யுத்த உபகரணங்கள் பெற்ற சுமார் முப்பது ஆயிரம் படையினர் இமாம் ஹுஸைனையும் அவர்களது குடும்பத்தினரையும் எதிர்த்துப் போராட கங்கணங் கட்டிச் சூழ்ந்து கொண்டனர்.

05 . முஹர்ரம் 6ம் நாள் கவர்னரின் கடிதம் தளபதிக்கும் இமாம் ஹுஸைனின் கடிதம் சகோதரருக்கும்

உபைதுல்லாஹ் , உமர் இப்னு ஸஅத்திற்கு ' நான் காலாட் படை , குதிரைப் படை மற்றும் ஆயுதங்கள் எல்லாம் தயார் செய்து அனுப்பி வைத்துள்ளேன் . இரவு பகல் பாராது கள நிலவரங்கள் பற்றிய தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள் ' எனக் கடிதம் எழுதினான் .

இவ் வேளையில் , இமாம் ஹுஸைன் அவர்கள் , முஹம்மத் இப்னு ஹனபிய்யா என்ற தமது சகோதரருக்கு பின் வருமாறு மிகவும் சுருக்கமாகவும் கருத்தாழம் மிக்கதாகவும் ஒரு கடிதம் அனுப்புகிறார்கள் ' பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் . அலியின் மகன் ஹுஸைனிடம் இருந்தும் பனூ ஹாஷிம்களிடம் இருந்தும் அலியின் மகன் முஹம்மதிற்கு , ' வையகம் இல்லை . மறுமையே நிதர்சனம் ' வஸ்ஸலாம் '

06 . முஹர்ரம் 7ம் நாள் தண்ணீர்த் தடை

முஹர்ரம் 7ம் நாள் உபைதுல்லாஹ் உமர் இப்னு ஸஅத்திற்கு எழுதிய கடிதத்தில் ' புராத் நதியின் நீரை ஹுஸைனுக்கும் அவரது அன்பர்களுக்கும் கிடைக்காதவாறு தடுத்துக் கொள் ' என கட்டளை பிறப்பித்து இருந்தான் . கவர்னரின் கட்டளைக்கு இணங்க உமர் பின் ஸஅத் , அம்ர் இப்னு ஹஜ்ஜாஜின் தலைமையில் சுமார் ஐநூறு படை வீரர்களை புராத் நதியோரப் பாதுகாப்பிற்காக அனுப்பி வைத்து , அஹ்லுல் பைத்தினருக்கு தண்ணீர் கிடைக்காதவாறு பாரிய தடையை ஏற் படுத்தினான் . இமாம் ஹுஸைன் வீர மரணம் எய்துவதற்கு 3 நாட்களுக்கு முன்பு இருந்தே இந் நிலை மிகவும் உக்கிரமாகக் கடைப் பிடிக்கப் பட்டது .

07 . முஹர்ரம் 9ம் நாள் தாஸூஆ

முஹர்ரம் 9ம் நாள் ஷிம்ர் இப்னு தில் ஜௌஸன் , உபைதுல்லாஹ் இப்னு ஸியாதிடம் இருந்து இராணுவ கட்டளை அடங்கிய மடலோடு வந்து உமர் இப்னு ஸஅதிடம் வாசித்துக் காட்டிய போது , இப்னு ஸஅத்திற்கு கடுங்

கோபமும் ஆத்திரமும் மேலிட்ட நிலையில் ' விடயம் சமாதானமாக முடியும் என நான் எதிர் பார்த்து இருந்தேன் . நீயோ விடயத்தை மோசமாக்கி விட்டாய் . ஹுஸைன் ஒரு போதும் சரண் அடைய மாட்டார் . காரணம் அவரது தந்தையின் உயிரோட்டம் அவரது உள்ளத்தில் குடி கொண்டு இருக்கிறது '

இத்தனை உரையையும் செவி மடுத்த ஷிம்ர் ' என்ன செய்யப் போகின்றாய் ? தலைவரின் கட்டளைக்குக் கீழ்ப ;படியப் போகிறாயா ? அல்லது படையை விட்டு விலகி படைத் தளபதியாக நான் பொறுப்பேற்பதை விரும்புகிறாயா ? ' எனக் கர்ஜித்த போது , ' இப் படையின் தலைமைப் பொறுப்பை உன்னிடம் ஒப்படைக்க முடியாது . அதற்கு நீ பொருத்தமானவன் அல்ல . நானே முன்னின்று இக் காரியத்தைச் செய்கிறேன் . நீ காலாட் படைத் தளபதியாக இருந்து கொள் ' எனக் கூறினான் .

எதிரிப் படையினர் நான்கு புறமும் படை சூழ இமாம் ஹுஸைனையும் அவரது பிள்ளைகளையும் உறவினர்கள் , ஆதரவாளர்கள் அனைவரையும் நடுவே வைத்து முற்றுகை இட்டனர் . அஸருடைய நேரம் , மாதர் குல மாணிக்கம் பாத்திமா நாயகியின் அருந் தவப் புதல்வர் , சுவர்க்கத்து வாலிபர்களின் தலைவர் , பெருமானாரின் மேனியில் ஏறி இறங்கி விளையாடியவர் , அறிஞர் , வணக்கவாளி , இறை ஞானி , சட்ட வல்லுநர் , பகீஹ் ... ஆகிய அனைத்து அறிவு ஆற்றல் , அஹ்லாக் , வீரம் போன்ற உண்மையும் உயர்வும் மிக்க இமாம் ஹுஸைன் அவர்கள் தமது வாளை வைத்துக் கொண்டு உற்கார்ந்த நிலையில் சற்று அயர்ந்து விட்டார்கள் . அப்போது , அவர்களது சகோதரி வீர மங்கை பீபீ ஸைனப் வந்து , ' சகோதரரே ! என்ன உறக்கமா ? எதிரிகளின் சப்தமும் ஆரவாரமும் கேட்கவில்லையா ? அவர்களோ எம்மை அண்மித்து வந்துவிட்னரே ' என்றார்கள் . இமாம் ஹுஸைனோ , ' என் சகோதரியே ! இச் சிறு உறக்கத்தில் நபி பெருமானார் ( ஸல் ) அவர்களை நான் கனவில் கண்டேன் . விரைவில் எம்மோடு வந்து சேர்;ந்து விடுவீர்கள் எனக் கூறினார்கள் ' என்றார்கள் .

அதன் பின் இமாம் ஹுஸைன் அவர்கள் , எதிரிகள் எதற்காக வந்துள்ளனர் ? ஏன் முற்றுகை இட்டு;ள்ளனர் ? என்பதை அறிந்து வருமாறு தம் சகோதரர் அப்பாஸை அனுப்பி ' முடியுமாயின் இன்றைய இரவை வணக்கத்திலும் பிரார்த்தனையிலும் இறைவனிடம் இரைஞ்சுவதிலும் பயன் படுத்திக் கொள்ள கால அவகாசம் கேட்டு வருமாறு ' தூது அனுப்பி அவ் அனுமதியைப் பெற்றுக் கொண்டார்கள் . அன்றைய இரவெல்லாம் இமாம் இறை வழிபாடு , இறை வணக்கம் , அல் குர்ஆன் ஓதுதல் போன்ற தமக்கு விருப்பமான ஆன்மீக வழியில் கழிக்கலானார்கள் . இது இமாம் ஹுஸைனின் இறுதி இரவு . ஒவ்வொரு நிமிடத்தையும் அவர்கள் மிகப் பெறுமதி மிக்கதாகக் கருதி , இறை தியானத்திலேயே கழித்து மறு நாள் தமது சகோதரர்கள் , பிள்ளைகள் எனப் போராடி , ஈற்றில் இறைத் தூதரின் அருந் தவப் புதல்வி , ஈரல் கொழுந்து பாத்திமா ஸஹ்ராவின் மகன் இமாம் ஹுஸைன் எதிரிப் படையின் நடு மத்தியில் போராடித் தம் இன்னுயிர் ஈந்தார்கள் இன்னாலில்லாஹ் !

அஷ் ஷெய்க் அப்துல் ஹலீம்